அஸ்ஸெய்யிது ரஷீத் மௌலானா அல் காதிரிய்யில் பக்தாதி அல் ஹைதராபாதி

வலிய்யுஸ் ஸாலிஹீன் வ முர்ஷிதுஸ் ஸாலிகீன்,ஹாபிழுல் குரான்,ஷெய்குல் காமில், அஸ்ஸெய்யிது ரஷீத் மௌலானா அல் காதிரிய்யில் பக்தாதி அல் ஹைதராபாதி அவர்களின் வரலாறு

பிறப்பு : பக்தாத், ஈராக்

ரஷீது மௌலானா அல் பக்தாதி அவர்கள் பக்தாத்தில் இருந்து இந்தியாவிற்கு மார்க்க தாவா பணியின் நிமித்தம் குடிபெயர்ந்தவர்கள். இவர்கள் பெரும் சூஃபி ஞானியாக திகழ்ந்தவர்கள், ஹைதராபாத் மக்கா பள்ளியில் பல்லாண்டுகாலம் பிரதம இமாமாகவும், மார்க்க சட்ட நெறிமுறைகளைப் போதிக்கும் மார்க்க சட்ட வல்லுநராகவும் திகழ்ந்துள்ளார்.

குடும்பப் பாரம்பரியம் :

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் 31ஆம் தலைமுறை வாரிசாகவும், முஹியத்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்களின் 18ஆம் தலைமுறை வாரிசாகவும் ரஷீது மௌலானா அல் பக்தாதி அவர்கள் திகழ்கிறார்கள்.

தந்தை : அஷ்ஷெய்கு, அஸ்ஸெய்யிது கலீல் மௌலானா அல் காதிரிய்யுல் ஹஸனிய்யுல் ஹாஷிமிய் அல் பக்தாதி ஆவார்கள்.

அஸ்ஸெய்யிது ரஷீது மௌலானா பக்தாதி நாயகம் அவர்களின் உடன்பிறந்த சகோதரரான அஷ்ஷெய்குல் காமில் அஸ்ஸெய்யிது ஜமாலுதீன் அல் காதிரிய்யுல் ஹஸனிய்யுல் ஹாஷிமிய் அல் பக்தாதி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பக்தாதில் பெரும் புகழ்ப்பெற்ற இறைநேசராகவும் மார்க்க சட்ட அறிஞராகவும் திகழ்ந்துள்ளார், இவர்கள் பக்தாதில் வலிய்யுல் அஉலம் என்றும் இமாமுல் அஉலம் என்றும் சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டவர்கள்.

அஸ்ஸெய்யிது ரஷீது மௌலானா பக்தாதி நாயகம் அவர்களின் மகனார் : அஷ்ஷெய்குல் காமில், அஸ்ஸெய்யிது ஹஸன் மௌலானா அல் காதிரிய்யுல் பக்தாதி ஆவார்கள், இவர்களின் மதார் ஷரீ.ஃப் /அடக்கவிடம் சென்னை மண்ணடியில் உள்ள அங்கப்ப நாயகன் தெருவில் மஸ்ஜித் ம.ஃமூர் வளாகத்தில் அமையப்பெற்றுள்ளது, இவர்களும் பெரும் சூ.ஃபி மகானாக திகழ்ந்து பல ஊர்களுக்கும் சென்று தீனுல் இஸ்லாத்தின் ஒளியை பரவச்செய்தவர்கள்.

அஷ்ஷெய்குல் காமில், அஸ்ஸெய்யிது ரஷீத் மௌலானா அல் பக்தாதி அவர்களின் அடக்கவிடம்/ மதார் ஷரீ.ஃப், தெலுங்கானா மாநிலத்தில் உள்ள ஹைதராபாத் எனும் ஊரில் நம்பள்ளி எனும் பிரதேசத்தில் தாருஸ்ஸலாம் வீதியில் உள்ள கித்தே ஸாலிஹீன் எனும் மக்பரா வளாகத்தில் அமையப்பெற்றுள்ளது

அஸ்ஸெய்யிது ரஷீது மௌலானா பக்தாதி நாயகம் அவர்களின் சகோதரரான வலிய்யுல் அஉலம் அஷ்ஷெய்குல் காமில் அஸ்ஸெய்யிது ஜமாலுதீன் அல் காதிரிய்யுல் ஹஸனிய்யுல் ஹாஷிமிய் அல் பக்தாதி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மகனான வலிய்யுல் அக்பர் அஸ்ஸெய்யிது ஜமாலிய்யா முஹம்மது மௌலானா அல் பக்தாதி அவர்களும் பக்தாதில் இருந்து பாரதம் வந்து குடிபெயர்ந்து மார்க்கப்பணி முறிந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்கள் தமிழ்நாட்டில் சம்பைப்பட்டினத்தில் அடங்கப்படியுள்ளார்கள். இவர்களின் குடும்ப வழி ஸில்ஸிலா எனப்படும் பரம்பரை சங்கிலித்தொடரிலும் ஞான வெளியான இவர்களின் காதிரிய்யா ஞானப்பட்டையின் குருமார்கள் சங்கிலித்தொடரையும் கண்டுகொள்ளலாம்.

ரஷீது மௌலானாவின் மறைவு :

ஹிஜ்ரி 1351 ரஜப் மாதம் பிறை 20, இது ஆங்கில நாட்காட்டியில் டிசம்பர் 3 ஆம் திகதி (சனிக்கிழமை) 1932 ஆகும்.